தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 252 | 4 Pages | 10.4.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 252 | 4 பக்கங்கள் | 10.4.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு

**விளக்கம்:**
தனக்கு உற்ற துன்பத்தை பொறுத்தலும் மற்ற உயிர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலும் ஆகிய அவ்வளவே தவத்திற்கு வடிவமாகும்

# நாமக்கல்லில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த 3 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம் நிவாரணம் வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு

சென்னை, ஏப்.10

நாமக்கல்லில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த 3 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம் நிவாரணம் வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில், நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஆண்டாபுரம் கிராமம், தெற்குத் தெருவில் வசித்துவரும் இளஞ்சியம் (வயது 50) என்பவர் தனது மகன்வழிப் பேரன் சுஜித் (வயது 5) மற்றும் மகன்வழிப் பேத்தி ஐவிழி (வயது 3) ஆகிய மூவரும் நேற்று 7.4.2025 பிற்பகல் 3.00 மணியளவில் தங்களது தோட்டத்திற்கு சென்ற போது,

6.4.2025 அன்று இரவு வீசிய பலத்த மழை மற்றும் காற்றினால் மின் கம்பிகள் சேதமடைந்து விவசாய நிலத்தில் இருந்த இரும்புக் கம்பிவேலி மீது விழுந்த நிலையில், அந்தக் கம்பிவேலியை மேற்படி மூவரும் தொட்டபோது எதிர்பாராத விதமாக மின்சாரம் தாக்கியதில் மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.



மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## பதிலடி வரி விதித்த சீனா மீது கோபத்தில் டிரம்ப் விதித்த கூடுதல் வரி



வாஷிங்டன், ஏப்.10

அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்ற டொனால்டு டிரம்ப், அமெரிக்க பொருட்களின் மீது அதிக இறக்குமதி வரி விதிக்கும் இந்தியா, சீனா போன்ற நாடுகளின் பொருட்களுக்கு அமெரிக்காவிலும் அதே அளவுக்கு பரஸ்பர வரி விதிக்கப்படும் என்று அறிவித்திருந்தார். உலக நாடுகளுக்கான இந்த வரி விதிப்பை ஏப்ரல் 2ம் தேதி அதிபர் டிரம்ப் அறிவித்தார்.

அதன்படி, இந்திய பொருட்களின் இறக்குமதிக்கு 27 சதவீத பரஸ்பர வரியும், சீனாவுக்கு 34 சதவீதம், வங்காளதேசம் 37 சதவீதம், வியட்நாம் 46 சதவீதம், ஐரோப்பிய ஒன்றியம் 20 சதவீதம், ஜப்பான் 24 சதவீதம், இந்தோனேசியா 32 சதவீதம், பாகிஸ்தான் 29 சதவீதம், தாய்லாந்து 36 சதவீதம் என வரி விதிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. 10 சதவீத அடிப்படை வரி விதிப்பு ஏப்ரல் 5ம் தேதியிலிருந்தும், கூடுதல் வரி விதிப்பு ஏப்ரல் 9ம் தேதிக்குப் பிறகும் அமலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது. அமெரிக்காவின் இந்த வரி விதிப்புக்கு பல்வேறு நாடுகள் கடும் அதிருப்தி தெரிவித்தன. இதனையடுத்து ஏப்ரல் 10ம் தேதி முதல் அனைத்து அமெரிக்க பொருட்களுக்கும் 34 சதவீதம் இறக்குமதி வரி விதிக்கப்படும் என்று சீனா அறிவித்தது.

இந்தநிலையில், சீனா மீது கூடுதலாக 50 விழுக்காடு வரியை விதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அறிவித்துள்ளார். சீனா விதித்த 34 விழுக்காடு பதிலடி வரியை திரும்பப் பெறாவிட்டால், கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும் வரி விதிப்பு தொடர்பாக சீனாவுடனான அனைத்து பேச்சுவார்த்தைகளும் நிறுத்தப்படுவதாக தெரிவித்த டிரம்ப், பிற நாடுகளுடன் உடனடியாக பேச்சுவார்த்தை தொடங்கப்படும் என அறிவித்துள்ளார்.

## விமானத்தில் பெண்ணுக்கு திரும்ப, திரும்ப பாலியல் தொந்தரவு அளித்த இந்திய வம்சாவளி நபர்



நியூயார்க், ஏப்.10


அமெரிக்காவின் மொன்டானா மாகாணத்தில் உள்ள பெல்கிரேடு நகரில் இருந்து டெக்சாஸ் மாகாணத்தின் டல்லாஸ் நகர் நோக்கி அமெரிக்கஏர்லைன்ஸ் விமானம் ஒன்று பறந்து சென்றது. அப்போது, நடுவானில் விமானத்தில் பயணித்த பெண் ஒருவரிடம் பவிஷ் குமார் தஹியாபாய் சுக்லா என்பவர் பாலியல் சீண்டல் மற்றும் பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டு உள்ளார் என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுபற்றி அந்த பெண் தன்னுடைய கணவரிடம் மொபைல் போன் வழியே குறுஞ்செய்தி அனுப்பியுள்ளார். உடனடியாக போலீசாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. விமானம் தரையிறங்கியதும் அவரை போலீசார் கைது செய்தனர். அவரிடம் விசாரித்ததில் நியூ ஜெர்சி நகரை சேர்ந்தவர் என தெரிய வந்தது. அவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இதுபற்றி எப்.பி.ஐ. அமைப்பின் சிறப்பு அதிகாரி சாத் மெக் நிவேன் கூறும்போது, அந்த பெண்ணை 2 முறை சுக்லா தகாத முறையில் தொட்டிருக்கிறார் என கூறினார். எப்.பி.ஐ. அதிகாரிகளிடம், பாதிக்கப்பட்ட அந்த பெண் கூறும்போது, அந்த நபர் முதலில் தொடைகளை தொட்டார். பின்னர், பின்புறம் மற்றும் முதுகின் கீழ் பகுதியிலும் தொட்டார் என புகாராக கூறியுள்ளார்.

இதேபோன்று விமான நிலைய போலீசார் பதிவு செய்துள்ள புகாரை பற்றி நிவென் கூறும்போது, அந்த பெண் கழிவறைக்கு சென்று விட்டு திரும்பும்போது, அந்த பகுதிகளை சுக்லா அழுத்தி தேய்த்ததுடன், அவருடைய செயலை மறைக்கும் வகையில் கோட் ஒன்றால் மறைத்தபடி அந்தரங்க பகுதியிலும் அழுத்தி தேய்த்துள்ளார் என குற்றச்சாட்டாக தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்திய வம்சாவளி நபரான அவர் விமானத்தில் பெண்ணுக்கு திரும்ப, திரும்ப பாலியல் தொந்தரவு அளித்துள்ளார். இந்த பாலியல் குற்றச்சாட்டை மற்றொரு பயணி உறுதிப்படுத்தி உள்ளார் என மெக் நிவென் கூறியுள்ளார். இதுபற்றி சுக்லாவிடம் போலீசார் விசாரித்தபோது, ஆங்கிலத்தில் பேச எனக்கு வராது என கூறியுள்ளார். ஆனால், அந்த பெண்ணிடமும், அவருடைய மகளிடமும் ஆங்கிலத்தில் அவர் பேசியிருக்கிறார் என நிவென் கூறினார். நியூ ஜெர்சியில் உள்ள கோர்ட்டு ஒன்றில் அவர் ஆஜர்படுத்தப்பட்டபோது, குஜராத்தி பேசும் ஒருவர் அவருக்கு உதவியாக பணி அமர்த்தப்பட்டார் என கோர்ட்டு ஆவணம் தெரிவிக்கின்றது.




மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) அலுவலகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்க்கும் முகாமில் மேயர் இந்திராணி பொன்வசந்த் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். அருகில் துணை மேயர் நாகராஜன், மண்டல தலைவர் பாண்டிச்செல்வி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## முதல்வரிடம் நேரில் வாழ்த்து



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புதிதாக நியமிக்கப்பட்ட மும்பை மாநில மாநகர் பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு தலைமையில் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் வாழ்த்துப் பெற்றனர்.

மும்பை மாநில பொறுப்புக்குழுத் தலைவராக நியமிக்கப் பட்ட மும்பை திமுக மாநகர்க்கழக தலைவர் ம.சேசுராசு மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் க.மு.மாணிக்கம், அன்பழகன் பொற்கோ, ம.நீதிதுரை, மாறன் ஆரியசங்காரன், ஆகியோர் ஆழ்வார்பேட்டையில் உள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் இல்லத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்..

இவர்களோடு பம்பாய் திருவள்ளுவர் மன்றம் தலைவரும், மும்பை கலைஞர் தமிழ்ச் சங்கம் செயலாளருமான ஜேம்ஸ் தேவதாசன் உடனிருந்தார்.

## புளியங்குடி நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டங்கள்: மாவட்ட கலெக்டர் ஆய்வு



தென்காசி மாவட்டம் புளியங்குடி நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டங்களை மாவட்ட பட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தென் மாவட்டத்திற்கென பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். பொதுமக்களுக்குத் தேவையான வளர்ச்சித்திட்டங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைந்து கொண்டு வருவதற்கு அறிவுறுத்தி உள்ளார்கள். அதனடிப்படையில் மாவட்டத்தில் நடைபெற்று வரும் மற்றும் முடிவுற்ற திட்டப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு திட்டங்களை விரைந்து முடிக்க உரிய அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இன்றைய தினம், புளியங்குடி நகராட்சியில் ரூ.3.60கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டு ள்ள காந்தி தினசரி அங்காடியினையும், இலத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டிடத்தினையும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட கொள்ளப்பட்டது.

தொடர்ந்து, தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றுவரும்மாணவ, மாணவியர்களுக்கான நீட் தேர்விற்கான இலவச பயிற்சியினை ஆய்வு செய்து பாடக்குறிப்புபுத்தகங்களை மாணவ, மாணவியர்களுக்கு வழங்கி அனைவரும் நீட் தேர்வில் வெற்றி பெற வாழ்த்துக்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்தார்.

## தாராபுரம் சேலம் ஆர்.ஆர். பிரியாணி திறப்பு விழா



திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் அலங்கியம் சிக்னல் அருகில் புதியதாக சேலம். ஆர். ஆர். பிரியாணி கடை திறப்பு விழா நடைபெற்றது சேலம் ஆர்.ஆர். பிரியாணி கடை உரிமையாளர் சேலம் தமிழ்ச்செல்வன் அவர்கள் கலந்துகொண்டு திறந்து வைத்தார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக திமுக தெற்கு மாவட்ட செயலாளர் இல.பத்மநாபன் தாராபுரம் நகர கழக செயலாளர் முருகானந்தம், கொங்கு இளைஞர் பேரவை நிறுவனர் தனியரசு, திரைப்பட நடிகர் கூல் சுரேஷ், மற்றும் தாராபுரத்தில் உள்ள முக்கிய பிரமுகர்கள் அரசியல் கட்சியினுடைய பொறுப்பாளர்கள் சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் என திரளாக கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா, கலவை வட்டம், வாழப்பந்தல் கிராமம் செங்குந்தர் திருமண மண்டப வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு மக்கள் தொடர்பு திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ந.சுரேஷ், ஒன்றியக் குழு தலைவர் அசோக், வருவாய் கோட்டாட்சியர் இராஜராஜன், வட்டாட்சியர் சுரேஷ். ஒன்றியக் குழு உறுப்பினர் குணசுந்தரி. ஊராட்சி மன்ற தலைவர் முனுசாமி மற்றும் பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருள்மிகு ஸ்ரீ மாரியம்மன் திருக்கோவில் திருவிழாவை முன்னிட்டு தாராபுரம் மதநல்லிணக்க குழு மற்றும் ஸ்ரீ தில்லாபுரி அம்மன் அன்னதான குழு இணைந்து பிரசாதமாக அன்னதானம் வழங்கப்பட்டது இதில் சமூக சேவை சிவசங்கர் கவி ஸ்ரீ முனியப்பன் புளிய மரத்துக்கடை சாமி மெஸ் பெருமாள் சாமி பொன்ராம் விஜயகுமார் மொய்தீன் பாஷா, ஷாஜகான், சாகுல் ஹமீது, வங்கி அப்பாஸ் அலி முத்தரசு மற்றும் பலர் கலந்து கொண்டு பிரசாதம் வழங்கினர்

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

## தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கருப்பு சட்டை அணிந்து வேலை நிறுத்த போராட்டம்



தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள்சங்கத்தினர்பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கருப்பு சட்டை அணிந்து வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர்

மதுரை பழங்காநத்தம் ரவுண்டானா பகுதியில் தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கம் சார்பாக பல்வேறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் தழுவிய வேலை நிறுத்தமும் கருப்பு சட்டை அணிந்து கண்டன போராட்டத்தில் ஈடுபட்டனர். குறிப்பாக, விரல் ரேகை பதிவு, ஆதார் சமர்ப்பிப்பு, 40 சதவீதம் மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும், டி என் சி எஸ் சி எடை தராசும்,அலுவலக கணினியோடு இணைத்து ரசீது வழங்கிய பின்பு தான் நியாய விலை எடை தராசம் பி ஓ எஸ் விற்பனை முனையத்துடன் இணைக்கப்பட வேண்டும் எனவும், பொது விநியோக திட்டத்திற்கு தனித்துறை வழங்க வேண்டும், அத்தியாவசிய பொருட்கள் அனைத்தும் சரியான எடையில் தரமான பொருட்களை பொட்டலமாக வழங்கப்பட வேண்டும், கல்வி தகுதிக்கு ஏற்ப ஊதியம் வழங்க வேண்டும், ஊர எஸ்தலைமையில்ஊதிய குழு அமைத்து 9வது மாநில ஊதிய மாற்ற குழுவுடன் சேர்க்கப்பட வேண்டும உள்ளிட்ட 30 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பெண்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டோர்கருப்பு சட்டை அணிந்து கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இந்த ஆர்ப்பாட்டத்தில் தலைமை மாவட்ட தலைவர் பாலமுருகன் ,மாநில துணைத் தலைவர் செல்லத்துரை, முன்னிலை மாவட்டச் செயலாளர் அருணாச்சலம்,சிறப்புரை மாவட்ட பொருளாளர் பாக்கியம்,மாவட்ட நிர்வாகிகள்பவர்சிங்சிவபாண்டியன் பெருங்காம நல்லூர்பாண்டி காளியப்பன் தங்கவேலு மாயாண்டி .மற்றும் நியாய விலை கடை பணியாளர்கள் என அனைவரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

## காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி அவர்கள் சட்டப்பேரவையில் கோரிக்கை



தமிழ்நாடு சட்டப்பேரவையில் வினாக்கள் விடை நேரத்தில் மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடம் காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி வினாக்கள் விடைகள் நேரத்தில் கேள்வி எழுப்பினார். 1) காரைக்குடி ஸ்ரீராம் நகர் ரயில்வே கேட் பகுதியில் மேம்பாலம் அமைப்பதற்கான நிலமெடுப்பு பணிகள் நடைபெற்று முடிந்தது. மேம்பாலம் கட்டுவதற்கான பணிகள் எப்பொழுது தொடங்கப்படும்.

2) காரைக்குடி மானாமதுரை ரயில் பாதையில் அரியக்குடி இலுப்பக்குடி செல்லும் சாலையின் குறுக்கே ரயில்வே மேம்பாலம் அமைக்கப்படுமா?

3) காரைக்குடி மாநகராட்சியில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் 10 அறைகளுடன் கூடிய அரசு விருந்தினர் மாளிகை அமைக்கப்படுமா? என காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாங்குடி கோரிக்கை வைத்தார். அதற்கு பதிலளித்த நெடுஞ்சாலைத்துறை மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஏற்கனவே இக்கோரிக்கைகள் தொடர்பாக என்னிடம் கடிதம் அளித்துள்ளார். கோரிக்கைகள் தொடர்பாக பணிகளுக்கு சம்பந்தப்பட்ட துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிறகு முதல்வர் அவர்களிடம் ஆலோசிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்எனதெரிவித்தார்கள்.

## 2025-26ம் நிதியாண்டுக்கான சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுக்காக ரூ.702 கோடி ஒதுக்கீடு: தமிழ்நாடு அரசாணை வெளியீடு




சென்னை, ஏப்.10

2025,26ம் நிதியாண்டுக்கான சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுக்காக ரூ.702 கோடி ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிட்டுள்ளது. தமிழ்நாட்டில் மொத்தம் 234 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. தமிழக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுக்கு ஒவ்வொரு வருடமும் ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்து வருகிறது.

இந்த தொகையில் எம்.எல்.ஏ.,க்கள் தங்களுடைய தொகுதியில் கட்டமைப்பு வசதிகளை செயல்படுத்துவார்கள். அரசு பள்ளி கட்டிடங்கள், சாலை வசதிகள், சாக்கடை வசதிகள், பேருந்து நிறுத்த வசதிகள்,குடிநீர்தொட்டிகள், நூலகம், அங்கன்வாடி மையங்கள், சுகாதாரத் திட்டங்கள் உள்படபல்வேறு அடிப்படை அத்தியாவசிய திட்டங்களை தனது தொகுதி மக்களுக்கு எம் எல்ஏக்கள் நிதியை விடுவித்து வேலை செய்ய அதிகாரிகளை அறிவுறுத்தலாம்.

எம்எல்ஏ தொகுதி மேம்பாட்டு நிதி இல்லாமல் பல்வேறு பணிகளுக்கு அரசும் தனியாக நிதி ஒதுக்கி சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இந்நிலையில் 2025 26 நிதியாண்டுக்கான எம்.எல்.ஏ.க்கள் தொகுதி மேம்பாட்டுக்காகரூ.702 ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிட்டுள்ளது.

## உச்ச நீதிமன்ற தீர்ப்பால் உயர்கல்வியில் எந்த தடைகளும் இனி இருக்காது: கல்வியாளர்கள் கருத்து

சென்னை, ஏப்.10

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பால் மாணவர்களின் உயர்கல்வியில் இனி எந்த தடைகளும் இருக்காது. துணை வேந்தர்கள் நியமனம் செய்யப்பட்டால் பல்கலைக்கழகங்களின் பிரச்னைகள் சரியாகி விடும் என கல்வியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மசோதாக்களை நிறுத்தி வைத்த தமிழ்நாடு ஆளுநரின் செயல் சட்டவிரோதம் என கூறி, நிறுத்தப்பட்ட 10 மசோதாக்களுக்கு உச்சநீதிமன்றம் ஒப்புதல் வழங்கி வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது. இத் தீர்ப்பினால், தமிழ்நாடு மாணவர்களின் எதிர்காலத்தை நீதிமன்றம் சிறப்படைய செய்துள்ளதாக கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, போர்க்கால அடிப்படையில் துணை வேந்தர்கள் நியமனம் செய்ய வேண்டும் என கல்வியாளர் ஜெயப்பிரகாஷ் காந்தி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், மிகப்பெரிய, மிகவும் வரவேற்கத்தக்க தீர்ப்பை உச்ச நீதிமன்றம் அளித்துள்ளது. இது தமிழ்நாடு மாணவர்களுக்கு புத்துணர்வை அளிக்கும். பிற மாநிலங்களுக்கும் முன்னோடியாக நாம் செயல்பட்டுள்ளோம். நாடு வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் கல்வி வளர்ச்சி அடைய வேண்டும். இனிமேல் எந்த இடையூறுகளும் இல்லாமல் பல்கலைக்கழகங்கள் செயல்படும். துணைவேந்தர்கள் நியமனத்தில் வெளிப்படைத் தன்மை இருக்கும் என எதிர்பார்க்கலாம். மேலும், துணைவேந்தர்கள் இல்லாமல் செயல்பட்டு கொண்டிருக்கும் பல்கலைக்கழகங்களுக்கு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

நாம் உயர்கல்வியில் உயர்ந்து இருக்கிறோம் என கல்வியாளர் ராஜராஜன் தெரிவித்துள்ளார். அவர் கூறியதாவது:

தமிழ்நாட்டை பொறுத்தவரை கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. பள்ளிக் கல்விக்கான நிதியை அளிக்காமல் ஒன்றிய அரசு பிடிவாதம்பிடித்தபோதிலும் மாணவர்களுக்கு எந்தக் குறையும் தமிழ்நாடு அரசு வைக்கவில்லை. அதுபோல உயர்கல்வியிலும் நாம் உயர்ந்து நிற்கிறோம். ஒன்றிய அரசு கூறியதைப்போல மும்மொழிக்கொள்கையை பின்பற்றாமல் இரு மொழிக்கொள்கை மூலமாகவே அந்தவளர்ச்சியை எட்டியுள்ளோம்.

மாற்று மொழி படிக்க விரும்புபவர்களையும் தடுக்கவில்லை. விருப்பம்போல் படிக்க விடுகிறோம். யார் மீது எந்த திணிப்பும் இல்லாமலே உயர்கல்வியில் உயர்ந்து இருக்கிறோம். பல்கலைக்கழக துணைவேந்தர்கள் நியமனத்தில் ஆளுநர் இடையூறாக இருந்தார். தற்போது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு மூலம் அவை சரி செய்யப்பட்டுள்ளது. இனி மாணவர்களின் உயர்கல்வியில் எந்த தடைகளும் இருக்காது. பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்கள் விரைவில் நியமிக்கப்பட்டு பிரச்னைகள் சரியாகி விடும். இவ்வாறு அவர் கூறினார்.

## புதுமாப்பிள்ளையை கொன்று நண்பர் தற்கொலை: கேரளாவை சேர்ந்தவர்கள்





கோவை, ஏப்.10

கேரள மாநிலம் கோழிக்கோடு கருவச்சேரியை சேர்ந்தவர் ஜெயராஜ்(55),அதே பகுதியை சேர்ந்தவர் மகேஷ் (45). நண்பர்களான இருவரும் கோவை அருகே துடியலூர் விசுவநாதபுரம் பகுதியில் வாடகை வீடு எடுத்து வசித்து வந்தனர். வெள்ளக்கிணர் ரோடு விநாயகர் கோயில் பகுதியில் பேக்கரி மற்றும் ஸ்வீட் கடை நடத்தி வந்தனர். இந்நிலையில், நேற்று இருவரும் ஸ்வீட் கடைக்கு வராததால், ஊழியர்கள் அவர்களது வீட்டுக்கு சென்று பார்த்தனர். அப்போது, கதவு உள்பக்கமாக தாழிடப்பட்டிருந்தது.

நீண்ட நேரம் தட்டியும் கதவை திறக்காததால் இதுகுறித்து துடியலூர் போலீசாருக்கு தகவல் அளித்தனர். போலீசார் வந்து கதவை உடைத்து பார்த்தபோது மகேஷ் கழுத்தறுக்கப்பட்ட நிலையிலும், ஜெயராஜ் தூக்கிட்ட நிலையிலும் இறந்து கிடந்தனர். இதுகுறித்து, துணை ஆணையர் தேவநாதன் கூறுகையில்,"சம்பவம் நடந்த இடத்தில் ஆய்வு செய்ததில் ஒருவர்கழுத்து அறுக்கப்பட்ட நிலையில்சடலமாக கிடந்தார். எனவே, ஒருவரைகொன்றுவிட்டு மற்றொருவர் தற்கொலை செய்திருக்கலாம் என தெரிகிறது. உறவினர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது'' என்றார்.

மகேசுக்கும், பன்னிமடையை சேர்ந்த சதி என்ற பெண்ணுக்கும் கடந்த மாதம் தான்திருமணம் நடந்துள்ளது. புதுமண தம்பதிகள் தனி வீடு பார்த்து செல்ல இருந்துள்ளனர். வீடு கிடைக்கும்வரைமகேஷ் மனைவியை பன்னிமடையில் விட்டுவிட்டு ஜெயராஜுடன் தங்கியிருந்துள்ளார். அப்போது இருவருக்குள்ளும் பணப்பிரச்னை எழுந்ததாக கூறப்படுகிறது. இதனால், இந்த சம்பவம் நடந்திருக்கலாம் என்று போலீசாரின் முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

## ரூ.3.2 கோடி தங்கம் கொள்ளை குற்றவாளியாக சேர்க்கப்பட்ட கூலி தொழிலாளி தற்கொலை



பேரணாம்பட்டு, ஏப்.10

சென்னையில் இருந்து கர்நாடக மாநிலம் கே.ஜி.எப்பகுதியைச்சேர்ந்த நகைக்கடைஅதிபர்சேதன் குமார்,கே.ஜி.எப்நோக்கி 3.50 கிலோ எடை கொண்ட ரூ.3.2 கோடி மதிப்புள்ள தங்க கட்டிகளை காரில் கொண்டு சென்றுள்ளார். பேரணாம்பட்டு வழியாக பத்தலப்பல்லி மலைப்பாதையில் ஆந்திரா எல்லையில் கார் சென்ற போது ஒரு கும்பல் காரை வழிமறித்து நகை கடை அதிபரை தாக்கி தங்க கட்டிகளை கடத்திச் சென்றது.

புகாரின்படி வி.கோட்டா போலீசார் நடத்திய விசாரணையில் கேஜிஎப் பகுதியில் உள்ள காங்கிரஸ் கட்சி கவுன்சிலர் ஒருவர் தலைமையில் பேரணாம்பட்டு பகுதியை சேர்ந்த 10க்கும் மேற்பட்டோர் இந்த குற்றச்செயலில் ஈடுபட்டது தெரியவந்தது. இதையடுத்து கவுன்சிலர் உள்பட பேரணாம்பட்டு பகுதியை சேர்ந்த சிலரை போலீசார் கைது செய்தனர். இதில் வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு அடுத்த குண்டலபல்லி கிராமத்தை சேர்ந்த கூலி தொழிலாளி ஜெயராஜ் என்கின்ற அப்பு(30) என்பவரை 8 வது குற்றவாளியாக சேர்த்துள்ளனர்.

இதனை அறிந்த அப்பு மனம் வேதனை அடைந்து பேரணாம்பட்டு குடியாத்தம் செல்லும் சாலையில் உள்ள கொண்டமல்லி காட்டில் தூக்குப்போட்டு நேற்று தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து பேரணாம்பட்டு போலீசார் விசாரணை நடத்தி, அப்புவின் செல்போனை ஆய்வு செய்தனர். அதில் இந்த குற்ற செயலுக்கும் எனக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை, என்னை வலுக்கட்டாயமாக 2 பேர் தான் கூட்டிச் சென்றார்கள் என்றும், எனது சாவுக்கு காரணம் அவர்கள்தான் என்றும் உறவினர்களிடம் பேசியுள்ளார்.

## காஸ் சிலிண்டர் விலை உயர்வு குடும்ப தலைவிகள் கொந்தளிப்பு: மானியம் தருவதில்லை ; ரூ.50 டிப்ஸ் மட்டும் தரணும், ஒன்றிய அரசு வயிற்றில் அடிப்பதாக குற்றச்சாட்டு

சேலம், ஏப்.10

நாடு முழுவதும் நேற்று காலை முதல் காஸ் சிலிண்டர் விலை ரூ.50 உயர்த்தப்பட்டது. இந்த விலை உயர்வால் இல்லத்தரசிகள் கடும் கொந்தளிப்புக்கு ஆளாகியுள்ளனர். வீட்டு உபயோக காஸ் சிலிண்டர் விலையை ரூ.50 உயர்த்துவதாக எண்ணெய் நிறுவனங்கள் நேற்று முன்தினம் அறிவித்தது. இந்த விலை உயர்வு நேற்று முதல் அமலுக்கு வந்தது. இதையடுத்து, சென்னையில் ரூ.868.50 ஆக காஸ் விற்பனை செய்யப்பட்டது. இந்த காஸ் சிலிண்டர் விலை உயர்வால், ஏழை, எளிய, நடுத்தரமக்கள் கடும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

இதுகுறித்து குடும்பத்தலைவிகள் கூறுகையில், '

'ஒரு ஆண்டாக சிலிண்டர் விலையை குறைக்காமல் ஒரே விலையில் வைத்திருந்தனர். அதுவும் விலையை குறைக்க வேண்டிய சூழலில் எல்லாம் வரியை ஏற்றிக் கொண்டு, எங்களை ஏமாற்றி விட்டனர். தேர்தல் வந்தால் மட்டும் சிலிண்டர் விலையை குறைப்பேன்என்றபோக்கில் பாஜ அரசு இருக்கிறது. நாடாளுமன்ற தேர்தல் வரும்போது (கடந்தாண்டு மார்ச் 8ம் தேதி) சிலிண்டர் விலையில் 100 ரூபாய் குறைத்தனர். தேர்தல் முடிந்து மீண்டும் ஆட்சிக்கு வந்த நிலையில், 50 ரூபாயை ஏற்றிவிட்டனர். இவர்கள் எங்கள் வாழ்வில் விளையாடுகின்றனர்.

சிலிண்டர் விலை ரூ.868.50 என்றால், எங்களிடம் சிலிண்டர் கொண்டு வந்து போடும் நபர் கூடுதலாக ரூ.50 வரை வசூலிக்கிறார். இதனால், 950 ரூபாய் வரை கொடுக்க வேண்டியிருக்கிறது. ஏற்கனவே சிலிண்டருக்கு அரசு மானியம் தருவதில்லை.

வெறுமனே ரூ.39.81 மட்டுமே வரவாகிறது. அதுவும் ஒரு சிலருக்கே இந்த மானியம் கிடைக்கிறது. இதற்கு முன்பெல்லாம் சிலிண்டருக்கானமானியம் ரூ.400 வரை வழங்கப்படும். அதையும் சுருட்டி கொண்டு எங்கள் வயிற்றில் பாஜ அரசு அடிக்கிறது. தற்போது ரூ.50 அதிகரித்திருப்பது கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது'' என்றனர்.

## வக்பு மசோதா, இந்தி திணிப்புக்கு எதிர்ப்பு ரயில் நிலையத்தில் இந்தி அழிப்பு




சோழவந்தான், ஏப்.10

மதுரை மாவட்டம் சோழவந்தான் ரயில் நிலையம்பிளாட்பாரத்தின் கிழக்கு பகுதியில் உள்ள இரண்டு பெயர் பலகைகளில் சோழவந்தான் எனும் இந்தி எழுத்துகளை மட்டும் கருப்பு பெயின்டால்சிலர்நேற்று அழித்துள்ளனர். மேலும் ஒரு பெயர் பலகையில் வக்பு திருத்த சட்டத்தை எதிர்ப்பதாக ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. மற்றொரு பலகையில் இந்தி திணிப்பை எதிர்ப்பதாக எழுதி இருந்தனர்.

## நடிகர் சிவாஜிக்கு சொந்தமான அன்னை இல்லத்தில் எனக்கு உரிமையும், பங்கும் இல்லை: ஐகோர்ட்டில் ராம்குமார் பிரமாண பத்திரம் தாக்கல்

சென்னை, ஏப்.10

நடிகர் சிவாஜி கணேசனின் அன்னை இல்லம் வீட்டில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று ராம்குமார் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

ஜகஜால கில்லாடி படதயாரிப்புக்காக நடிகர் சிவாஜி கணேசனின் பேரன் துஷ்யந்த் பெற்ற கடன் வட்டியுடன் சேர்த்து 9 கோடியே 39 லட்சம் ரூபாயை திருப்பித் தரக் கோரிய வழக்கில் நடிகர் சிவாஜி கணேசனின் அன்னை இல்லம் வீட்டை ஜப்தி செய்யுமாறு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், அன்னை இல்லம் எனக்கு சொந்தமானது என்பதால், வீட்டை ஜப்தி செய்ய பிறப்பித்த உத்தரவை நீக்க வேண்டும் என்கோரி, நடிகர் பிரபு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்திருந்தார். இந்த மனு விசாரணைக்கு வந்தபோது, துஷ்யந்தின்தந்தை ராம்குமார்தரப்பில், அன்னை இல்லத்தின் மீது எனக்கு எந்த உரிமையும், பங்கும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, இது சம்பந்தமாக பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்யுமாறு ராம்குமாருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

வழக்கு நீதிபதி அப்துல் குத்தூஸ் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, அன்னை இல்லத்தை எனது சகோதரர் நடிகர் பிரபுவுக்கு, எனது தந்தை சிவாஜி கணேசன் உயில் எழுதி வைத்துள்ளார். அந்த வீட்டின் மீது எனக்கு தற்போது, எந்த உரிமையும், எந்த பங்கும் இல்லை என்று ராம்குமார் தரப்பில் பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. இதையடுத்து, நடிகர் பிரபு மற்றும் தனபாக்கியம் எண்டர்பிரைசஸ் தரப்பில் வாதிடப்பட்டது. வாதங்கள் முடிவடையாததால் விசாரணையை 15ம் தேதிக்கு நீதிபதி தள்ளிவைத்தார்.

## நண்பருக்கு பிறந்தநாள் பேனர் வைத்தபோது மின்சாரம் பாய்ந்து 2 சிறுவர்கள் பலி





திருவண்ணாமலை, ஏப்.10

திருவண்ணாமலை திருநகர் பகுதியைச்சேர்ந்தவர் ராமலிங்கம். விவசாயி. அவரது மகன் தனுஷ்குமார்(17). பிளஸ் 2 தேர்வு எழுதியுள்ளார். இவரது நண்பரின் பிறந்த நாள்விழாவுக்காக பேனர் வைக்க, அண்ணா நகர் 5வது தெருவைச் சேர்ந்த தனியார் நிறுவனத்தில் செக்யூரிட்டியாக வேலை செய்யும் ராஜா என்பவரது மகன் 8ம் வகுப்பு மாணவரான லோகேஷ்வரன்(13) மற்றும் சில நண்பர்களுடன் நேற்று முன் தினம் இரவு சென்றுள்ளனர்.

திருவண்ணாமலை – மணலூர்பேட்டை சாலையில் தனியார் காஸ் ஏஜென்சி அருகே சாலையோரம் உள்ள டிரான்ஸ்பார்மர் அருகே, இரவு 11 மணியளவில் பேனரை அமைத்துள்ளனர். அப்போது, பேனரில் பொருத்தியிருந்த இரும்பு சட்டம், டிரான்ஸ்பார்மருக்கு செல்லும் உயர்மின் கம்பியில் உரசியது. இதனால், தனுஷ்குமார், லோகேஷ்வரனும் மின்சாரம் பாய்ந்து பரிதாபமாக இறந்தனர்.

# கொடைக்கானல் இபாஸ்: வெப்சைட் திடீர் முடக்கம்

கொடைக்கானல், ஏப்.10

கொடைக்கானலுக்கு செல்ல இபாஸ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. வார நாட்களில் நாள் ஒன்றுக்கு 4,000 சுற்றுலா வாகனங்களுக்கும் வார இறுதி நாட்களில் 6,000 சுற்றுலா வாகனங்களுக்கும் அனுமதி வழங்கி ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது. சுற்றுலாப்பயணிகள் படையெடுப்பால்நேற்று முற்பகலில் இருந்து மாலை வரை இபாஸ் வெப்சைட் முடங்கியது. இதனால் கொடைக்கானலுக்கு செல்ல இபாஸ் பெற முடியாமல் சுற்றுலாப்பயணிகள் மிகுந்த அவதிக்குள்ளாகினர்.

# வளைகாப்பு விழாவில் பங்கேற்றவர்களுக்கு தர்பூசணி பழம் வழங்கிய மருத்துவ தம்பதி



ஜெயங்கொண்டம், ஏப்.10

அரியலூர் மாவட்டம் செந்துறை அடுத்த மருதூரை சேர்ந்தவர் கிருபாகரன். இவரது மனைவி அபிநயா. டாக்டர்களான இருவரும் மருதூரில் கிளினிக் நடத்தி வருகின்றனர். இந்நிலையில் டாக்டர் அபிநயாவின் வளைகாப்பு விழா, மருதூர் திருமண மண்டபத்தில் நேற்று நடந்தது. வளைகாப்பு விழா நடந்த மண்டபத்தில் தர்பூசணி பழங்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தது. சமீப காலமாக தர்பூசணி பழத்தில் ரசாயனம் கலக்கப்படுவதாக வதந்தி சமூக வலைதளங்களில் காட்டுத்தீயாக பரவியது. இதனால் தர்பூசணி பழத்தை வாங்காமல் பொதுமக்கள் புறக்கணித்து வந்ததால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

இதை கருத்தில் கொண்டு விவசாயத்தை காப்பாற்ற வேண்டும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் வளைகாப்பு விழாவுக்கு வருவோருக்கு தர்பூசணி பழங்கள் வழங்க டாக்டர் தம்பதி முடிவு செய்தனர். இதற்காக தான் மண்டபத்தில் தர்பூசணி பழங்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. இதையடுத்து விழாவில் பங்கேற்ற 700க்கும் மேற்பட்டோருக்கு தாம்பூல பையுடன் தலா ஒரு முழு தர்பூசணி பழம் வழங்கப்பட்டது. விவசாயத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக வளைகாப்பு விழாவில் பங்கேற்றவர்களுக்கு டாக்டர் தம்பதியினர் தர்பூசணி வழங்கிய சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

# அமைச்சரின் சகோதரர் கே.என்.ரவிச்சந்திரனை அமலாக்கத்துறை அலுவலகத்திற்கு அழைத்து வந்து விசாரணை



சென்னை, ஏப்.10

அமைச்சர் கே.என்.நேருவின் மகன் அருண் நேரு மற்றும் அவரது சகோதரர்களான சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் வசிக்கும் கே.என்.ரவிசந்திரன், கோவை சிங்காநல்லூர் உப்பிலிபாளையம் பகுதியில் வசிக்கும் கே.என்.மணிவண்ணன் ஆகியோர் டிவிஎச் என்ற பெயரில் கட்டுமான நிறுவனம், மின் உற்பத்தி நிறுவனம், ஜிஎஸ்என்ஆர் உள்ளிட்ட நிறுவனங்கள் நடத்தி வருகின்றனர். இந்த நிறுவனங்கள் வருமானத்தை குறைத்து கணக்கு காட்டியதாக குற்றச்சாட்டு எழுந்ததை தொடர்ந்து, கடந்த 2018ல் தொடர்புடைய இடங்களில் வருமான வரித்துறை சோதனை நடந்தது.

சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் கே.என்.ரவிச்சந்திரனின் டிவிஎச் எனர்ஜி ரிசோர்சஸ் நிறுவனம், அவரது வீடு மற்றும் அருண் நேருவுக்கு சொந்தமான ஆழ்வார்பேட்டை சி.வி.ராமன் சாலையில் உள்ள ஜிஎஸ்என்ஆர் ரைஸ் இண்டஸ்டீரிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம், மயிலாப்பூர் சிஐடி காலனியில் உள்ள பிரகாஷ் என்பவரின் வீடு, அடையாறு காந்தி நகர், சாஸ்திரி நகர் உள்பட சென்னையில் 7 இடங்களில் 2வது நாளாக சோதனை நடந்தது.

கே.என்.ரவிச்சந்திரனிடம் விசாரணை நடந்து கொண்டிருந்த நிலையில் நேற்று பிற்பகல் திடீரென அமலாக்கத்துறை அதிகாரிகள் அவரை மட்டும், தனியாக காரில் ஆயிரம் விளக்கில் உள்ள தங்களது மண்டல அலுவலகத்திற்கு அழைத்து சென்று விசாரித்தனர். டிவிஎச் எனர்ஜி ரிசோர்சஸ் நிறுவனம் வங்கி ஒன்றில் ரூ.30 கோடி கடன் வாங்கியதாகவும், அந்த பணத்தை 3 நிறுவனம் மூலம் டிவிஎச் நிறுவனங்களுக்கு அனுப்பியதாகவும் கூறப்படுகிறது. இது குறித்து கடன் கொடுத்த சம்பந்தப்பட்ட வங்கி அளித்த புகாரின்படி 2021ல் சிபிஐ இந்த மோசடி தொடர்பாக வழக்கு பதிந்து விசாரித்து வந்ததாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

மேலும், தொழிலதிபர்களான இளையராஜா, தமிழ்மாறன், அறிவுநிதி இயக்குநர்களாக உள்ள 'ட்ரு டாம்' என்ற நிறுவனத்தின் பணப் பரிமாற்றம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த நிறுவனம் சைதாப்பேட்டை சிஐடி நகரை தலைமையிடமாக கொண்டு இயங்குகிறது. இந்த நிறுவனம் கடந்த 2013ல் திருப்பூரில் காற்றாலை அமைக்க வங்கியில் ரூ.22.48 கோடி கடன் பெற, டிவிஎச் கட்டுமான நிறுவனம் சார்பில் கே.என்.ரவிச்சந்திரன் உத்தரவாத கையெழுத்து போட்டுள்ளார். கடன் தொகை உள்பட மொத்தம் ரூ.30 கோடி வரை டிவிஎச் நிறுவனத்திற்கு மாற்றப்பட்டதாக தெரிகிறது. அதன் அடிப்படையில் தான் சிபிஐ 2021ல் வழக்கு பதிவு செய்துள்ளது.

இதுதொடர்பாக தான் கே.என்.ரவிச்சந்திரனை அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று அலுவலகத்திற்கு அழைத்து அடுக்கடுக்கான கேள்விகளை கேட்டு வாக்குமூலமாக பதிவு செய்ததாக கூறப்படுகிறது.

# சிங்கம்புணரி அருகே கோயில் திருவிழாவில் பல்வேறு சுவாமிகளின் வேடமணிந்து நேர்த்திக்கடன் செலுத்திய பக்தர்கள்




சிங்கம்புணரி, ஏப்.10

சிங்கம்புணரி அருகே, கோயில் திருவிழாவில் பல்வேறு சுவாமிகள் வேடமணிந்து பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தினர். சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி அருகே, குரும்பலூர் கிராமத்தில் பிரசித்தி பெற்ற செகுடப்பர் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் பங்குனி திருவிழா நேற்று முன்தினம் தொடங்கி 2 நாட்கள் நடைபெற்றது. முதல் நாள் விழாவில் செகுடப்பர் அய்யனார் மற்றும் கருப்பசாமிக்கு பெண்கள் மாவிளக்கு வைத்தும், கரும்பு தொட்டில் எடுத்தும் வழிபட்டனர். நேற்று மாலை பிரசித்தி பெற்ற புலிகுத்தும் வேட்டை நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் குரும்பலூர் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர். இவர்களில் பலர் சிவபெருமான், அம்மன், முருகன், எமதர்மர் உள்ளிட்ட சுவாமிகளின் வேடமணிந்தும், போலீஸ், மூதாட்டி போன்ற வேடமணிந்தும் கலந்துகொண்டனர். புலிகுத்தும் வேட்டையை முன்னிட்டு, கிராம கண்மாயில் பக்தர்கள் தங்களது உடல் முழுவதும் சேறு பூசிக்கொண்டனர். பின்னர், நடனமாடி மகிழ்ந்தனர். புலி ஆட்டமும் நடைபெற்றது. மேலும் பலர் தங்களது உடலில் வைக்கோல் பிரி சுற்றி வந்தனர். புலி ஆட்டத்துடன் நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது. பின்னர் கோயிலில் அனைவரும் வழிபட்டனர்.

# மானாமதுரை, திருப்புவனம் தேசிய வங்கி ஏடிஎம்களில் தமிழ்மொழி புறக்கணிப்பு: வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி




சிவகங்கை, ஏப்.10

மானாமதுரை/ திருப்புவனம்: மானாமதுரை, திருப்புவனத்தில் உள்ள தேசிய வங்கி ஏடிஎம் மையங்களில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டதால், வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தமிழ்நாட்டில் வங்கி ஏடிஎம் இயந்திரங்களில் உள்ள தொடு திரைகளில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மட்டுமே பயன்பாட்டு மொழிகளாக உள்ளன. இந்நிலையில், சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் உள்ள தேசிய வங்கி ஏடிஎம் மையம் ஒன்றில் நேற்று பணம் எடுக்கச் சென்ற வாடிக்கையாளர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஏடிஎம் இயந்திர தொடுதிரையில் தமிழ் மொழிக்கு பதிலாக இந்தி மற்றும் கன்னடம் ஆகியவை இடம்பெற்றிருந்தன. இதனால், வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர். மேலும், பணம் எடுக்க அவதிப்பட்டனர்.

இதேபோல, திருப்புவனத்தில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட மற்றொரு வங்கி ஏடிஎம் தொடுதிரையிலும் தமிழ் மொழிக்கு பதிலாக மற்றொரு மொழி இடம் பெற்றிருந்தது. இது குறித்து வாடிக்கையாளர்கள் கூறுகையில், 'அவசர தேவைக்கு ஏடிஎம்மில் பணம் எடுக்க வந்தோம். ஆனால், ஏடிஎம் தொடுதிரையில் தமிழ் மொழிக்கு பதிலாக வேறு மொழிகள் இடம் பெற்றிருந்ததால் அதிர்ச்சி அடைந்தோம். இதனால், தேவையற்ற குழப்பம் ஏற்படுகிறது. இதனை சரி செய்ய வங்கி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர். இது குறித்து வங்கி அதிகாரி ஒருவர் கூறுகையில், 'ஏடிஎம் மென்பொருளில் ஏதேனும் பிரச்னை ஏற்பட்டு இருக்கலாம். இதனை சரிசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

# மதுரை அருகே புடைப்புச் சிற்பம் கண்டுபிடிப்பு; சமணப் படுக்கை செய்தவருக்கு கலசம் நிறைய பொன் வழங்கல்: கல்வெட்டில் தகவல்



மதுரை, ஏப்.10

மதுரை அருகே, கொங்கர் புளியங்குளம் மலையில் புடைப்புச் சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் அருகில் உள்ள கல்வெட்டில், 'சமணப் படுக்கை செய்தவருக்கு கலசம் நிறைய பொன் கொடுத்த தகவல் குறிக்கப்பட்டுள்ளது. மதுரை கொங்கர் புளியங்குளம் அருகே இருக்கும் மலையில் 30க்கும் அதிகமான கற்படுக்கைகள் உள்ளன. இவற்றில் கிமு 2ம் நூற்றாண்டைச் சேர்ந்த 3 வணிக கல்வெட்டுகள் உள்ளன. இதில், கற்படுக்கை செய்து கொடுத்தவர்களுக்கு வழங்கப்பட்ட பொன்னின் அளவு குறித்த தகவல்கள் உள்ளதாக கூறப்படுகிறது. மலையின் இடதுபுறம் ஒரு மகாவீரர் சிலையும் தொல்லியல் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது கிபி 10ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இந்நிலையில் மதுரையை சேர்ந்த தமிழ் மெய்யியல் ஆய்வாளர் ஆசிரியர் ஹாருன் பாஷா, ஆசிரியர் விவேக் மற்றும் மாணவர் நிதிஷ்குமார் ஆகியோர் இப்பகுதியில் களஆய்வு மேற்கொண்டனர். இது குறித்து அவர்கள் கூறுகையில், 'இந்த மலைப்பகுதியில் கிபி 10ம் நூற்றாண்டைச் சேர்ந்த மகாவீரர் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மலைக்கு கீழே இடதுபுறம் ஒரு சிறு குகை போன்ற அமைப்பின் உள்ளே ஒரு குடையுடன் 2 பெண் சீடர்கள் சாமரம் வீச 20 செமீ உயரத்தில் ஒரு தீர்த்தங்கரரின் புடைப்புச் சிற்பம் வடிவமைக்கப்பட்டு உள்ளது. மேலும் அதன் அருகில் இரு பெரிய மற்றும் சிறிய வணிகர்களின் புடைப்புச் சிற்பமும் காணப்படுகிறது.

முதலாமவர் அவர்களை வணங்குவதாகவும், மற்றொருவர் கையில் ஒரு கலசம் (மண்பானை) இருப்பது போலவும் அது வடிக்கப்பட்டுள்ளது. அந்தக் கலசம் அங்கு படுக்கை செய்ய கொடுக்கப்பட்ட பொன்னின் அளவைக் குறிக்கிறது. இதுகுறித்து இம்மலை மீதுள்ள ஒரு கல்வெட்டில் தகவல் இருப்பது ஏற்கனவே கண்டறியப்பட்டது இதனை உறுதி செய்கிறது. பொன் அளிக்கும் வணிக சிற்பங்கள் தீர்த்தங்கரர் அருகில் இருப்பது இதுவே முதல் முறை. அந்த இடத்தை சுற்றி பல்வேறு தொல்லியல் தடயங்கள் விரவிக் கிடக்கின்றன. இவற்றை பாதுகாக்க தொல்லியல் துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்'' என்றனர்.

# 'ஷேப்டியான இடம் வேண்டுமாம்...' போலீஸ் ஸ்டேஷன் முன் போதை நபர் 'கொர்ர்ர்ர்' சமூக வலைதளங்களில் வைரல்



சிவகாசி, ஏப்.10

சிவகாசி போலீஸ் ஸ்டேஷன் முன்பு போதை ஆசாமி ஒருவர் மணிக்கணக்கில் தூங்கி கொண்டிருந்த சம்பவம் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. விருதுநகர் மாவட்டம், சிவகாசி நகர் பகுதியில் நேற்று மது அருந்திய வாலிபர் வீட்டுக்கு நடந்து சென்றார். நடக்க, நடக்க போதை ஏறியது. இதனால் தொடர்ந்து நடக்க முடியாமல் தள்ளாடியபடியே சென்றார். 'இப்படியே நடந்து சென்றால் வீடுபோய் சேர முடியாது. எங்காவது படுத்து விட்டு, பத்திரமாக வீடுபோய் சேருவோம்' என முடிவு செய்தார். இதனால் தள்ளாடி நடந்தவாறே, ஷேப்டியான இடத்தை தேடி அலைந்தார். ஆனால் ஒரு இடமும் அமையவில்லை.

இறுதியாக சிவகாசி டவுன் போலீஸ் ஸ்டேஷன் முன்பு வந்தவர் திடீரென நின்றார். 'அடடா.. இதுதான் பாதுகாப்பான இடம். எவனும் நம்ம செல்போன உருவ முடியாது' என முடிவுசெய்து, ஸ்டேஷன் முன்பு படுத்து உறங்க தொடங்கினார். மணிக்கணக்கில் இவர் தூங்கிக் கொண்டிருந்ததை பார்த்த பொதுமக்கள், 'ஆசாமிக்கு ரொம்ப தில்லுதான். குடிச்சு முடிச்சு எங்க வந்து மட்டையாகியிருக்கான். அடிவாங்காம போனா அதிர்ஷ்டசாலிதான்' என்று சிரித்தபடி சென்றனர். இந்த புகைப்படம் தற்போது வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

# ஈரோடு ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலில் சிக்கி 6 மாடுகள் பலி: ரயில்கள் தாமதம் - பயணிகள் அவதி



ஜோலார்பேட்டை. ஏப்.10

திருப்பத்தூர் அருகே ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலில் சிக்கி 6 எருமை மாடுகள் பலியானது. இந்த விபத்து காரணமாக ரயில்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டதால் பயணிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர். திருப்பத்தூர் அடுத்த சு. பள்ளிப்பட்டு அருகே நள்ளிரவு 6 எருமை மாடுகள் தண்டவாளத்தை கடந்துள்ளன. அப்போது அவ்வழியாக சென்னையில் இருந்து ஈரோடு செல்லும் ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலில் சிக்கி 6 எருமை மாடுகளும் பலியானது. இதை பார்த்த ரயில் என்ஜின் டிரைவர், ரயில் தடம் புரளாமல் இருக்க உடனடியாக ரயிலை நிறுத்தினார். பின்னர் இது குறித்து ஜோலார்பேட்டை ரயில்வே அதிகாரிகளுக்கும், மீட்பு பணி குழுவினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன்பேரில் சம்பவ இடத்திற்கு வந்த அதிகாரிகள் மற்றும் மீட்பு குழுவினர் சுமார் 2 மணி நேரம் போராடி ரயிலில் சிக்கிய எருமை மாடுகளின் உடல்களை மீட்டனர்.

இதற்கிடையே தன்பாத்தில் இருந்து கேரளா செல்லும் தன்பாத் எக்ஸ்பிரஸ் ரயில் மற்றும் செகந்திராபாத்தில் இருந்து திருவனந்தபுரம் செல்லும் சபரி எக்ஸ்பிரஸ் ரயில்கள் திருப்பத்தூர் ரயில் நிலையம் அருகே நிறுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயிலில் சிக்கிய எருமை மாட்டை மீட்ட பின்னர் இரண்டு மணி நேரத்திற்கு பிறகு ஏற்காடு எக்ஸ்பிரஸ் ரயில் இயக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக அரை மணி நேரம் தாமதமாக தன்பாத் மற்றும் சபரி எக்ஸ்பிரஸ் ரயில்கள் புறப்பட்டு சென்றது. இதனால் பயணிகள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர். இதுகுறித்து ஜோலார்பேட்டை ரயில்வே போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 'தினமும் 10 நாய்களுக்காவது கருத்தடை'



சென்னை, ஏப்.10

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி பேசுகையில், ''சுகாதாரத் துறையும், கால்நடைத்துறையும் இணைந்து ஒவ்வொரு கால்நடை மருத்துவமனையிலும் குறைந்தபட்சம் 10 நாய்களுக்காவது கருத்தடை செய்யக்கூடிய நிலையை ஒரு வாரம் முழுவதும் செய்தால் இனப்பெருக்கம் கட்டுப்படுத்தப்படும். அதை இந்த இரண்டு துறைகளும் சேர்ந்து செய்யுமா'' என கேட்டார்.

இதற்கு பதில் அளித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசுகையில், ''கருத்தடை செய்வது கால்நடைத் துறையின் பொறுப்பு. அதற்கான தடுப்பூசி போடுவது மருத்துவத் துறையின் பொறுப்பு. கடந்த 2 ஆண்டுகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்கள் 10,999ல் புதிதாக நாய்க்கடிக்கும், பாம்புக்கடிக்கும் மருந்து வைக்கப்பட்டு, ஆயிரக்கணக்கானோர் பயன்பெற்றுள்ளனர்'' என்றார்.

# பாஜ தலைவர் யார்? எல்.முருகன் பேட்டி



சத்தியமங்கலம், ஏப்10

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் பிரசித்திபெற்ற பண்ணாரி மாரியம்மன் கோயில் குண்டம் திருவிழா நேற்று நடைபெற்றது. விழாவை முன்னிட்டு ஒன்றிய இணை அமைச்சர் எல். முருகன் மதியம் பண்ணாரி அம்மன் கோயிலுக்கு வந்து சாமி தரிசனம் செய்தார். இதைத்தொடர்ந்து பக்தர்கள் குண்டம் இறங்கும் பகுதியை நேரில் பார்வையிட்டார்.

அப்போது அவரிடம் காஸ் விலை உயர்வு குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர், 'சமையல் காஸ் சிலிண்டர் விலை உயர்வு என்பது சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலை உயர்வை பொருத்து விலை நிர்ணயம் செய்யப்படுகிறது' என்றார். தொடர்ந்து, பாஜக மாநில தலைவர் நியமனம் குறித்து கேள்வி கேட்டபோது பதிலளிக்காமல் சிரித்தபடி சென்றார்.

தின கனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
10.4.2025

## போலீஸ் குடியிருப்பில் சிறுத்தை உலா: பொதுமக்கள் பீதி

கோத்தகிரி, ஏப்.10

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி போலீஸ் குடியிருப்பு பகுதியில் கடந்த சில நாட்களாக அடிக்கடி சிறுத்தைகள் நடமாடி வருவது அப்பகுதி சிசிடிவி கேமராவில் பதிவாகி வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவில் போலீஸ் குடியிருப்பு பகுதியில் சிறுத்தை உலா வந்து இரையைத்தேடி பல பகுதிகளில் சுற்றித்திரிந்தது.

இது தொடர்பான சிசிடிவி காட்சிகள் வெளியாகி போலீசார் மற்றும் அப்பகுதி பொதுமக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



சிறுத்தை போலீஸ் குடியிருப்பு பகுதியில் உலா வருவதை கண்டறிய, வனத்துறையினர் கண்காணிப்பை தீவிரப்படுத்தி கூண்டு வைத்து பிடிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ராஜபாளையம் அருகே வயலுக்குள் இறங்கிய பஸ்: பயணிகள் அலறல்

ராஜபாளையம், ஏப்.10

ராஜபாளையம் அருகே வயலுக்குள் பயணிகளுடன் பஸ் இறங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தில் இருந்து அரசு பஸ் 30 பயணிகளுடன் சுந்தரராஜபுரம் நோக்கி நேற்று புறப்பட்டது. சேத்தூர் ஊரக காவல் நிலையம் அருகே ஊருக்குள் பஸ் சென்று கொண்டிருந்தது. அப்போது



எதிரே சாலையில் மறுபுறம் நின்று கொண்டிருந்த உரம் மூட்டை ஏற்றிய டிப்பர் லாரி மீது மோதாமல் இருக்க, பஸ் டிரைவர் இடது பக்கமாக ஒதுங்கி சென்றார்.

அப்போது எதிர்பாராத விதமாககட்டுப்பாட்டை இழந்த பஸ், சாலையோரம் வயலுக்குள் இறங்கியது.

இதனால் அதிர்ச்சியடைந்த பயணிகள் கூச்சலிட்டனர். உடனடியாக பஸ்சை விட்டு இறங்கினர். குறுகலான இந்த சாலையில் அடிக்கடி விபத்து ஏற்பட்டு வருவதால் விரிவாக்கம் செய்ய வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அரிமளம் அருகே மாட்டு வண்டி பந்தயம்

திருமயம், ஏப்.10

அரிமளம் அருகே மாட்டு வண்டி பந்தயம் இன்று காலை நடந்தது. புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் அருகே மிரட்டுநிலையில் முத்து மாரியம்மன் கோயில் பங்குனி திருவிழாவை முன்னிட்டு மாட்டு வண்டி எல்கை பந்தயம் இன்று காலை 6 மணியளவில் நடைபெற்றது. பந்தயத்தில் புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 23 ஜோடி மாடுகள் கலந்து கொண்டன. பந்தயம் பெரிய மாடு, சிறிய மாடு



என இரு பிரிவாக நடத்தப்பட்டது. முதலில் நடைபெற்ற பெரிய மாடு பிரிவில் 7 ஜோடி மாடுகள் கலந்து கொண்ட நிலையில் பந்தய தூரம் சென்று, வர 8 மைல் தூரமாக நிர்ணயிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து நடைபெற்ற சிறிய மாடு பிரிவில் 18 ஜோடி மாடுகள் கலந்து கொண்டன. இதில் பந்தய தூரம் 6 மைலாக நிர்ணயிக்கப்பட்ட நிலையில் இரண்டு பிரிவுகளிலும் முதல் 4 இடங்களை பிடித்த மாட்டு வண்டி உரிமையாளருக்கு ரொக்க பரிசு உள்ளிட்ட சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது. பந்தயம் நடைபெற்ற மிரட்டுநிலை–புதுக்கோட்டை சாலையின் இருபுறமும் மக்கள் திரண்டு நின்று பந்தயத்தை கண்டு ரசித்தனர். அரிமளம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## ஆளுநரின் எதேச்சதிகார போக்கிற்கு உச்சநீதிமன்றம் சம்மட்டி அடி கொடுத்துள்ளது: தவெக பொதுச்செயலாளர் ஆனந்த்

சென்னை, ஏப்.10

ஆளுநரின் எதேச்சதிகார போக்கிற்கு உச்சநீதிமன்றம் சம்மட்டி அடி கொடுத்துள்ளது என த.வெ.க. பொதுச்செயலாளர் ஆனந்த் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி அனுப்பும் சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டியது ஆளுநரின்கடமை. ஆனால், நமது மாநில ஆளுநரோ தன்னிச்சையாக முடிவெடுத்து, தமிழ்நாடு அரசின் 10 சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் கிடப்பில் போட்டார். இதன் மூலம் மக்களாட்சித் தத்துவத்தின் மகத்துவத்தைக் கேள்விக்குறி ஆக்கினார். மாநிலத் தன்னாட்சி உரிமையை அவமதிப்பதாகவும் இச்செயல் இருந்தது.



இதோ இப்போது, மாநில அரசு அனுப்பும் மசோதாக்களைக் கிடப்பில் போடும் சிறப்பு அதிகாரம் ஆளுநருக்கு இல்லை என உச்சநீதிமன்றம், ஆளுநரின் எதேச்சதிகாரப் போக்கிற்குச் சம்மட்டி அடி கொடுத்துள்ளது. மேலும், ஆளுநரால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10 சட்ட மசோதாக்களுக்கு உச்சநீதிமன்றமே ஒப்புதலும் அளித்துள்ளது. மாநில உரிமை காக்கும், மக்களாட்சி மகத்துவம் பேணும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இத்தீர்ப்பை தமிழக வெற்றிக் கழகம் மனதார வரவேற்கிறது. தமிழகம் எப்போதும் மாநில உரிமைகள் காப்பதில், மாநிலத் தன்னாட்சிக் கொள்கையைப் பேணுவதில் இந்திய ஒன்றியத்திற்கே முன்னோடி மாநிலம் என்பது உலகறிந்த ஒன்று.

மாநிலத் தன்னாட்சிக்காகக் குரல் கொடுப்பதும் மாநில உரிமைகள் காப்பதும் தமிழக வெற்றிக்கழகத்தின்சமரசமற்ற கொள்கை நிலைப்பாடு. இதை வெற்றிக் கழக தலைவரின் அறிவுரையின் பெயரில் இத்தருணத்தில் உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

## மானாமதுரை, திருப்புவனம் தேசிய வங்கி ஏடிஎம்களில் தமிழ்மொழி புறக்கணிப்பு: வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி

சிவகங்கை, ஏப்.10

மானாமதுரை/ திருப்புவனம்: மானாமதுரை, திருப்புவனத்தில் உள்ள தேசிய வங்கி ஏடிஎம் மையங்களில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டதால், வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தமிழ்நாட்டில் வங்கி ஏடிஎம் இயந்திரங்களில் உள்ள தொடு திரைகளில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மட்டுமே பயன்பாட்டு மொழிகளாக உள்ளன. இந்நிலையில், சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் உள்ள தேசிய வங்கி ஏடிஎம் மையம் ஒன்றில் நேற்று பணம் எடுக்கச் சென்ற வாடிக்கையாளர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஏடிஎம் இயந்திர தொடுதிரையில் தமிழ் மொழிக்கு பதிலாக இந்தி மற்றும் கன்னடம் ஆகியவை இடம்பெற்றிருந்தன. இதனால், வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர். மேலும், பணம் எடுக்க அவதிப்பட்டனர்.





இதேபோல, திருப்புவனத்தில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட மற்றொரு வங்கி ஏடிஎம் தொடுதிரையிலும் தமிழ் மொழிக்கு பதிலாக மற்றொரு மொழி இடம் பெற்றிருந்தது. இது குறித்து வாடிக்கையாளர்கள் கூறுகையில், 'அவசர தேவைக்கு ஏடிஎம்மில் பணம் எடுக்க வந்தோம். ஆனால், ஏடிஎம் தொடுதிரையில் தமிழ் மொழிக்கு பதிலாக வேறு மொழிகள் இடம் பெற்றிருந்ததால் அதிர்ச்சி அடைந்தோம். இதனால், தேவையற்ற குழப்பம் ஏற்படுகிறது. இதனை சரிசெய்ய வங்கி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர். இது குறித்து வங்கி அதிகாரி ஒருவர் கூறுகையில், 'ஏடிஎம் மென்பொருளில் ஏதேனும் பிரச்னை ஏற்பட்டு இருக்கலாம். இதனை சரிசெய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

## அகிலுடன் இணைந்த ஸ்ரீலீலா 'லெனின்' பட கிளிம்ப்ஸ் வெளியீடு



தெலுங்குசினிமாஉலகில்முன்னணிநடிகர்நாகார்ஜுனாவின் மகன் அகில். இவரது நடிப்பில் கடைசியாக வெளிவந்த படம் 'ஏஜெண்ட்'. ராமபிரம்மம் சுங்கரா தயாரிப்பில் சுரேந்தர் ரெட்டி இயக்கத்தில் உருவான இந்தப் படம் கலவையான விமர்சனங்களை பெற்றது. இந்நிலையில், இவரது அடுத்த படம் தொடர்பான அறிவிப்பு வெளியாகி உள்ளது.


அதன்படி, இப்படத்தின் டைட்டில் கிளிம்ஸ் வீடியோவை படக்குழு தற்போது வெளியிட்டுள்ளது. இப்படத்திற்கு 'லெலின்' என பெயரிடப்படுள்ளது. இதில் அகிலுக்கு ஜோடியாக ஸ்ரீலீலா நடிக்கிறார்.

முரளி கிஷோர் இயக்கும் இப்படத்தை சித்தாரா என்டர்டெயின்மென்ட்ஸ்மற்றும்அன்னபூர்ணாஸ்டுடியோஸ் இணைந்து தயாரிக்கின்றன. தமன் இசையமைக்கிறார்.

## கவுதம் ராம் கார்த்திக்கின் புதிய பட பூஜை







1980களில் தமிழ் சினிமாவில் காதல் மன்னனாக கொடிகட்டிப் பறந்தவர் நவரசநாயகன்கார்த்திக். மௌனராகம், மேட்டுக்குடி, உள்ளத்தை அள்ளித்தா என பல சூப்பர் டூப்பர் ஹிட் படங்களில் நடித்து டாப் ஹீரோவாக வலம் வந்த கார்த்திக்கிற்கு கவுதம் கார்த்திக் என்கிற மகன் உள்ளார். தன்னைப்போலவே தன் மகனும் சினிமாவில் ஹீரோவாக ஜொலிக்க வேண்டும் என்கிற ஆசையில் கடந்த 2013ம் ஆண்டு கவுதம் கார்த்திக்கை தமிழ் திரையுலகில் ஹீரோவாக அறிமுகப்படுத்தினார்.

கவுதம் கார்த்திக், மணிரத்தினம் இயக்கத்தில் வெளிவந்த 'கடல்' படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானார். அதனைத் தொடர்ந்து 'இருட்டு அறையில் முரட்டு குத்து', 'ரங்கூன்', 'முத்துராமலிங்கம்', 'தேவராட்டம்' போன்ற பல படங்களில் நடித்துள்ளார். தேவராட்டம் படத்தில் நடித்தபோது நடிகை மஞ்சிமா மோகனை காதலித்த கவுதம் கார்த்திக் அவரை கடந்த 2022ம் ஆண்டு நடிகை மஞ்சிமா மோகனை பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்துகொண்டார்.

சினிமாவில் திருப்புமுனை ஏற்படுவதற்காக நடிகர்கள் பெயரை மாற்றுவதுண்டு. நடிகர் ஜெயம் ரவி கூட தன் பெயரை 'ரவி மோகன்' என மாற்றிக்கொண்டார். அந்த வகையில் நடிகர் கவுதம் கார்த்திக் தன் பெயரை 'கவுதம் ராம் கார்த்திக்' என மாற்றியுள்ளார்.

மிஸ்டர் எக்ஸ், கிரிமினல் போன்ற படங்களில் நடித்து வரும் கவுதம் ராம் கார்த்திக், அடுத்தபடியாக ராஜூ முருகனின் உதவி இயக்குனர் தினா ராகவன் என்பவர் இயக்கத்தில் அவரது 19வது படத்தில் நடிக்கிறார். இந்த படத்திற்கு ராஜூ முருகன் வசனம் எழுதுகிறார்.

இப்படம் தென் சென்னை கதைக்களத்தில் நகைச்சுவை கலந்த அரசியல் கதையில் உருவாகிறது. இந்த நிலையில் இந்த படத்தின் படப்பிடிப்பை இன்று பூஜை நிகழ்ச்சியுடன் துவங்கியதாக கவுதம் கார்த்திக் அவரது சமூக வலைதள பக்கத்தில் அறிவித்துள்ளார்.

## பிரசாந்த் நீல் ஜூனியர் என்.டி.ஆர் படத்தின் அப்டேட்



தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வருபவர் ஜூனியர் என்.டி.ஆர். இவர் கடைசியாக தேவரா படத்தில் நடித்திருந்தார். ஜான்வி கபூர் கதாநாயகியாக நடித்திருந்த இப்படம் ரூ. 500 கோடிக்கு மேல் வசூலித்தது.

இப்படத்தை தொடர்ந்து, பாலிவுட்டில் வார் 2 படத்தில் நடித்து வருகிறார். அதனை தொடர்ந்து ஜூனியர் என்.டி.ஆர், பிரசாந்த் நீல் இயக்கத்தில் புதிய படத்தில் நடிக்க உள்ளார். இந்த படத்திற்கு தற்காலிகமாக 'என்டிஆர்31' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தினை நந்தமுரி தரகா இராமா ராவ் ஆர்ட்ஸ் நிறுவனமும் மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனமும் இணைந்து தயாரிக்க உள்ளன. பிரபல கன்னட நடிகை ருக்மினி வசந்த் கதாநாயகியாக நடிக்க உள்ளார் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில், இப்படத்தின் அப்டேட் ஒன்று வெளியாகி உள்ளது. அதாவது, நாளை மதியம் 12.06 மணியளவில் முக்கிய அறிவிப்பு ஒன்று வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

## ஐ.பி.எல். 2025: குஜராத் அணியின் ஆதிக்கம் தொடருமா..?

10 அணிகள் பங்கேற்றுள்ள 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது.



இந்நிலையில் ஆமதாபாத்தில் இன்று நடைபெறும் 23வது போட்டியில் குஜராத் ராஜஸ்தான் அணிகள் மோதுகின்றன. சுப்மன் கில் தலைமையிலான குஜராத் அணி தனது முதல் ஆட்டத்தில் பஞ்சாப்பிடம் 11 ரன்கள் வித்தியாசத்தில் போராடி தோற்றது. அதன் பிறகு மும்பை, பெங்களூரு, ஐதராபாத் அணிகளை அடுத்தடுத்து எளிதில் வீழ்த்தியது.

குஜராத் அணியில் பேட்டிங்கில் கேப்டன் சுப்மன் கில், சாய் சுதர்சன், ஜோஸ் பட்லர், ரூதர்போர்டு நல்ல பார்மில் உள்ளனர். இவர்களின் நிலையான ஆட்டம் தான் குஜராத்தை வீறுநடை போட வைக்கிறது. பந்து வீச்சில் முகமது சிராஜ், பிரசித் கிருஷ்ணா, சாய் கிஷோர் கலக்குகிறார்கள். 'சுழல் மன்னன்' ரஷித் கானின் பந்து வீச்சு இதுவரை எடுபடவில்லை. அவரும் மிரட்டினால் பந்து வீச்சு மேலும் வலுவடையும்.

ராஜஸ்தான் அணி முதல் இரு ஆட்டங்களில் ஐதராபாத், கொல்கத்தாவிடம் தோற்றது. அடுத்து தொடர்ச்சியாக சென்னை, பஞ்சாப்பை வீழ்த்தியது. பேட்டிங்கில் கேப்டன் சஞ்சு சாம்சன், யஷஸ்வி ஜெய்ஸ்வால், ரியான் பராக், நிதிஷ் ராணா, துருவ் ஜூரெலும், பந்து வீச்சில் ஜோப்ரா ஆர்ச்சர், சந்தீப் ஷர்மா, தீக்ஷனா, ஹசரங்காவும் பலம் சேர்க்கிறார்கள்.

ஏறக்குறைய சரிசம பலத்துடன் மல்லுகட்டுவதால் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது. ராஜஸ்தானுக்கு எதிரான தங்களது ஆதிக்கத்தை நீட்டிக்கும் வேட்கையில் உள்ள குஜராத் அணிக்கு உள்ளூர் சூழல் சற்று அனுகூலமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

## சேசிங்கில் தொடரும் சோகம்.. தோல்வி குறித்து சென்னை அணி கேப்டன் கூறியது என்ன..?

ஐ.பி.எல். தொடரில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் விளையாடின. அதில் முதலில் பேட்டிங் செய்த பஞ்சாப் அணி 6 விக்கெட்டுகளை இழந்து 219 ரன்கள் குவித்தது. அடுத்து களமிறங்கிய சென்னை அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 201 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் சென்னை அணிக்கு எதிரான போட்டியில் 18 ரன்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி வெற்றிபெற்றது.

தோல்வி குறித்து கருத்து தெரிவித்த சென்னை அணியின் கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட், "கடைசி 4 போட்டிகளில் சென்னை அணியின் பீல்டிங் உச்சத்தில் இல்லை. கேட்ச்களை கோட்டைவிட்ட பின், அதே பேட்ஸ்மேன்க் கூடுதலாக 30 ரன்களை விளாசுகிறார்கள். அதேபோல் சில நேரங்களில் எதிரணி பேட்ஸ்மேன்களுக்கும் பாராட்டு தெரிவிக்க வேண்டும். பிரியன்ஷ் ஆர்யா சிறப்பாக பேட்டிங் செய்தார். அவரின் ரிஸ்க் மிகப்பெரிய பலனை அந்த அணிக்கு கொடுத்தது.

நாங்கள் சீரான இடைவேளையில் விக்கெட்டுகளை வீழ்த்தினாலும், பஞ்சாப் அணியின் ரன் குவிப்பை கட்டுப்படுத்த தவறிவிட்டோம். ஒருவேளை 15 ரன்களை குறைத்திருந்தால், சென்னை அணிக்கு சாதகமாக இருந்திருக்கும். ஆனாலும் தோல்விக்கு கேட்ச் டிராப் செய்தது முக்கிய காரணமாக உள்ளது. அதேபோல் 2 சிறந்த பேட்ஸ்மேன்கள் சிறப்பாக தொடங்கினார்கள்.

இருவருமே வேகப்பந்துவீச்சாளர்களை சிறப்பாக எதிர்கொண்டார்கள். அதேபோல் 2 முதல் 3 சிக்ஸ் கிடைத்திருந்தால், ஆட்டத்தில் எங்களின் கைகள் ஓங்கியிருக்கும். பவர்பிளேவில் சிறப்பாக ஆடி இருந்தோம். அதேபோல் கான்வே எப்போதும் டைமிங்கை வைத்து ஷாட்டை உருவாக்கும் பேட்ஸ்மேன். அதனால் ஜடேஜா அந்த நேரத்தில் இருந்தால் சரியாக இருக்கும் என்று தோன்றியது

அதேபோல் அவரின் ரோலும் வித்தியாசமானது. கான்வே சிக்ஸ் அடிப்பதற்காக காத்திருந்தோம். ஆனால் அந்த நேரத்தில் கான்வே ரிட்டையர்ட் அவுட் ஆவது அத்தியாவசியமாகிவிட்டது. பீல்டிங்கின் போது கொஞ்சம் உற்சாகமாக இருக்க வேண்டும். பதற்றமாக இருந்தால் கேட்ச்களை கோட்டைவிடுவோம்.

சில நேரங்களில் 2 முதல் 3 ரன்களை தடுத்து, ஒரு ரன் அவுட் செய்தால், அது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். பேட்டிங், பவுலிங் ஆகிய துறைகளில் மோசமான நாள் அமையும்.. ஆனால் பீல்டிங்கிற்கு அப்படி இருக்க கூடாது" என்று அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.